

நாகை மாவட்ட தி.மு.க. மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நாகை யாழிசை மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தரசான், க.மறைமலை, மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் சந்திரப்பாடி கிராமத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் இறங்குதளத்தை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.. அதைத்தொடர்ந்து சந்திரபாடி மீன் இறங்கு தளத்தில் நடைபெற்ற விழாவில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ வீ. மெய்யநாதன் குத்து விளக்கு ஏற்றினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம். சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர் எம்.அப்துல்மாலிக், செல்ல சேது ரவிக்குமார், பஞ்சி.குமார், ஏ.ஆர்.ராஜா,மாவட்ட ஊராட்சி தலைவர் உமா மகேஸ்வரி சங்கர்,தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரி குமரவேல் மற்றும் பலர் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

# புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!





புதுக்கோட்டை.ஆக. 22

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அடுத்தாண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி, ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 18ஆம் தேதி வரை வாக் குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச் சாவடி மறுசீரமைப்பு, வாக் காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப் படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

இதையடுத்து, ஒருங்கிணைந்த வாக்காளர் வரைவு பட்டியல் அக்டோபர் 29ஆம் தேதி வெளியிடப் பட்டு அன்றிலிருந்து நவம்பர் 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றுக்கான விண்ணப்பங்கள் பெறப்படும். 2025ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

எனவே, அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற பகுதிகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடி மக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வழங்கலாம்.

அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLOs), வாக்கு பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணபத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றிற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வயதுக்கான சான்றாக, பிறப்பு சான்றிதழ், ஆதார், பான் அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10ஆம் வகுப்பு அல்லது 12ஆம் வகுப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயம் ஆகும். http://voters.eci. gov. in, https://voterportal.eci. gov. in ஆகிய இணையதள முகவரி மற்றும் "வாக்காளர் உதவி" கைபேசி செயலி (VOTER HELPLINE Mobile App) ஆகியவற்றின் மூலம் ஆன் லைன் முறையில் விண்ணப்பிக்க வசதியும் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப்பணியில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் (BLA2) இணைந்து மேற்கண்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம். சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் க.நசீர் முகமது, கோவி.அய்யாராசு, என்.நடராஜன், மாநகரச் செயலாளர் சு.ப. தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மாவட்டக் கழகம் சார்பில்

# பகுதி - வட்டங்கள் தோறும் ஆலோசனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை, ஆக. 22-

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கடந்த 16.08.2024 அன்று நடைப்பெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கழக தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 2026ஆம் ஆண்டிற்கான சட்டசபை தேர்தலின் தி.மு.க. ஒருங்கிணைப்பு குழுவினர் அமைச்சர் கே.என்.நேரு, ஆர்.எஸ். பாரதி, அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு வீட்டுவசதித்துறை, மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை மற்றும் மாவட்ட பொறுப்பு அமைச்சர் சு.முத்துசாமி ஆலோசனைப்படி 19.08.2024 அன்று தி.மு.க. செயற்குழுக் கூட்டம், கோவை, மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வட்டங்கள் தோறும் வட்டக் கழக கூட்டங்கள், 16 பகுதி கழக பொது உறுப்பினர் கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது வட்ட கழகங்களிலும், பகுதி கழகங்களிலும் கூட்டங்கள் நடைபெறும் பொழுது அந்தந்த வட்டங்களுக்கு, பகுதிகளுக்கு உட்பட்ட இடங்களில் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், கூட்டம் நடைபெறும் இடம், நாள், தேதி, நேரம் போன்றவற்றை முறையாக அச்சிட்டு சுற்றறிக்கை மூலம் அப்பகுதி தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அனைத்து நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள், BLA2, பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் என அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.

ஒவ்வொரு வட்டங்களிலும், கழக உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப அனைத்து கழக நிர்வாகிகள், உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அளித்து தகவல் தெரிவிக்கவும் மேற்காணும் நடைமுறைகளை பின்பற்றி வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள் பொது உறுப்பினர் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் பகுதி1 க்கு உட்பட்ட வார்டுகளில் நடை பெறும் கூட்டங்கள் விபரம்:வார்டு எண் 55 24.08.2024 மாலை 5.00 மணி ஏ.ஆர்.எஸ். மஹால். வார்டு எண் 56 26.08.2024 மாலை 6.00 மணி செங்கோடம்மன் கோவில் மண்டபம்

வார்டு எண் 57 23.08.2024 மாலை 5.00 மணி எஸ்.வி.எஸ் மஹால்.

வார்டு எண் 58 25.08.2024 மாலை 5.00 மணி விக்னேஷ் மஹால்.

பீளமேடு பகுதி3 க்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம் வார்டு எண் 50 மாலை 6.00 மணி என்.ஜி. ஆர் வீதி, உடையாம் பாளையம் வார்டு எண் 51 3.9.2024 மாலை 6.00 மணி சமூக கூடம், சௌரிபாளையம்.வடக்கு தொகுதி

வடவள்ளி பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம் வார்டு எண் 36 வார்டு அலுவலகம் வார்டு எண் 37 24.08.2024 மாலை 5.00 மணி மருதம் ஸ்போர்ட்ஸ் கிளப்.வார்டு எண் 38 25.08.2024 காலை 10.00 மணிவார்டு அலுவலகம்.

வார்டு எண் 39 25.08.2024 மாலை 5.00 மணி வார்டு அலுவலகம்.

வார்டு எண் 40 25.08.2024 மாலை 7.00 மணி காஸ்மோ வில்லேஜ், பொங்காளியூர்.

பாப்பநாயக்கன் புதூர் பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்:

வார்டு எண் 41 22.08.2024 மாலை 7.00 மணி தி.மு.க. அலுவலகம், பிளன் புதூர்.வார்டு எண் 74 23.08.2024 மாலை 7.30 மணி சமுதாயக்கூடம்,பூசாரிபாளையம் வார்டு எண் 75 23.08.2024 மாலை 6.00 மணி.மற்ற பகுதிகளின் சுற்றறிக்கை பட்டியல் தயார் செய்து தெரிவிக்குமாறு பகுதி கழக செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. கோவை மாநகர் மாவட்டத்தின் பிற வட்டங்கள், பகுதிகளில் நடைபெறவிருக்கும் கூட்ட விபரங்கள் தொடர்ந்து அறிவிக்கப்படும்.அந்தந்த தொகுதி, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



சேலம் மத்திய மாவட்டம் மெய்யனூர் பகுதியில் மறைந்த கழகத்தின் மூத்த முன்னேடி ஆவின் ராஜேந்திரன் நினைவு கொடிக்கம்பத்தில் மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கழக கொடி ஏற்றினார். உடன் மேயர். ஆ.ராமச்சந்திரன். பகுதி செயலாளர் சி. பன்னீர் செல்வம். தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர். கலைஞர் தம்பிதுரை மற்றும் கோட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.சொ. கணேசன்

### ஆகஸ்ட் 22 (2005)



**பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, ஜெயங்கொண்டம் பகுதியிலே கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.**

**1967ஆம் ஆண்டு உடையார்பாளையம் வட்டக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய சீரணித் தலைவராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**1964ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1986ஆம் ஆண்டு தா.பழூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும், 1989 மற்றும் 1996 ஆகிய இருமுறை ஜெயங் கொண்டம் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராகவும், பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**


**"களம் பல கண்டவனே, சிறை பல சென்றவனே, உளம் கவர் உரையாற்றிப் பேரவையில் வென்றவனே, குளம் என எமது கண்கள் நீர்நிறைய, கணப் பொழுதில் மறைய; மனம், ஏன் வந்ததோ? எப்படித்தான் வந்ததோ–" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மே.சு. சண்முகசுந்தரம்

### ஆகஸ்ட் 22 (2021)



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே பணியாற்றி வந்தவர்.**

**1950ஆம் ஆண்டு தான் பிறந்த ஊரில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மதுராந்தகம் வட்ட முதல் செயலாளராகவும், நகர நெசவாளர் அணியிலும், இலக்கிய அணியிலும் பொறுப்பு வகித்தவர்.**

**அய்யன் திருவள்ளுவர் அறக்கட்டளையை உருவாக்கி, அதன்மூலம் மாணவர்களுக்கு பரிசு வழங்குதல், மக்களுக்கான மருத்துவ முகாம் போன்றவற்றை நடத்தியவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**